

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 15.07.2024 அன்று உப்பிலியாபுரம் ஒன்றியம், தளுகை ஊராட்சியில் ரூ.6.45 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், முசிறி சட்டமன்ற உறுப்பினர் ந.தியாகராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் த.இராஜேந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்ட கழக, பொதுக்குழு உறுப்பினர்கள் நடத்தும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கலைஞரை உலகம் புகழ பெரிதும் காரணம் எழுதுகோலா ? செங்கோலா? என்ற தலைப்பில் கலை மாமணி சொல்வேந்தர் சுகிசிவம் அவர்கள் தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது. பொதுக்குழு உறுப்பினர்கள் பன்னீர்செல்வம், சண்முகம், தனசேகரன் ஆகியோர் வரவேற்றுப் பேசினர். திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையேற்று பட்டிமன்றத்தை துவக்கி வைத்தார். நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு உரையாற்றினார். மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ராஜேஸ்வரன், கார்த்தி, மணிமேகலை ராஜபாண்டி ஆகியோர் நன்றி கூறினர். எழுதுகோலே என்ற தலைப்பில் செந்தமிழ்ச் செல்வி திருமதி சாந்தாமணி, சிந்தனைச் செல்வர் சிவசக்தி வடிவேல், சொல் அரசி பேராசிரியர் பர்வீன் சுல்தானா, செங்கோலே என்ற தலைப்பில் முனைவர் திருமதி எழிலரசி, நகைச்சுவை நயாகரா மோகனசுந்தரம், திருச்சி நீலகண்டன் ஆகியோர் கலந்து கொண்டு பட்டி மன்றத்தில் உரையாற்றினர்.

## முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்:

# ஈரோடு மாவட்டம் - ஊரகப் பகுதி அரசு உதவிபெறும் பள்ளிகளில் விரிவாக்கம்!

## அமைச்சர் சு.முத்துசாமி தொடங்கி வைத்தார்!

ஈரோடு, ஜூலை 18-

முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் 15.07.2024 அன்று முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஊரகப் பகுதியில் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் விரிவாக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஈரோடு மாவட்டம், எலவமலை அரசு நிதியுதவி பெறும் ஏ.பி.எஸ். பாரதி கல்வி நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் 15.07.2024 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஊரகப் பகுதியில் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் விரிவாக்கம் செய்து தொடங்கி வைத்துள்ளார்கள். இத்திட்டமானது முதற்கட்டமாக 15.09.2022 அன்று மதுரை மாவட்டத்தில் துவங்கி வைக்கப்பட்டது. அரசு பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், தமிழ்நாட்டில் 31,008 அரசு பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 14,40,350 மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. இதில்ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 1079 பள்ளிகளுக்கு சுமார் 47,000 மாணவ, மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் காமராஜர் பிறந்த நாளான (15.07.2024) ஊரக பகுதிகளில் அரசு நிதியுதவி பெறும் தொடக்கப்பள்ளிகளிலும் இத்திட்டம் விரிவாக்கத்தினை செய்து துவக்கி வைத்துள்ளார்கள். காமராஜருக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்ற உணர்வோடு துவக்கி வைத்துள்ளர்கள். இதில் தமிழகம் முழுவதும் உள்ள 4154 அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 2,56,705 மாணவர்கள் பயன்பெறுகின்றனர். முதலில் துவக்கி வைக்கப்பட்டது மற்றும் 2ம் கட்டமாக துவக்கி வைக்கப்பட்டது என முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 35,162 1 பயன்பெறுகிறார்கள். 5 16,97,056 மாணவ, மாணவியர்கள் ஈரோடு மாவட்டத்தை பொறுத்தவரை 36 அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படுகிறது. இதில் 3,055 மாணவர்கள் பயன்பெறவுள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் முதற்கட்டம் மற்றும் 2ம் கட்டம் சேர்த்து 1,115 பள்ளிகளைச் சேர்ந்த 50,055 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுகின்றனர். பெற்றோர்களால் பல நேரங்களில் குழந்தைகளுக்கு காலை உணவினை முறையாக அளிக்க இயலுவதில்லை. பெற்றோர்கள் காலை நேரங்களில் வேலைக்கு செல்வதால் குழந்தைகளுக்கு உணவு அளிப்பது என்பது கடினமாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு, முதலமைச்சர் அவர்கள் காலை உணவுத் திட்டத்தினை கொண்டு வந்துள்ளார்கள். வேறெந்த மாநிலத்திலும் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுவதில்லை. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான் முதன்முதலாக இத்திட்டத்தினை கொண்டு வந்துள்ளார்கள். அரசு பள்ளியில் பயிலுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் இத்திட்டத்தின் மூலம் உயர்ந்துள்ளது. பெற்றோர்களும் மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர். இது ஒருமாபெரும் திட்டமாகும். முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பு ஏற்பதற்கு முன்பே உங்கள் தொகுதியில் ஸ்டாலின் என்ற திட்டத்தின் மூலம் பொது மக்களின் கோரிக்கைகளை மனுக்களாக பெற்று, முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் அம்மனுக்கள் துறை வாரியாக பிரித்தெடுக்கப்பட்டு, சம்பந்தபட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி அம்மனுக்கள் மீது உரிய தீர்வுகாணப்பட்டது அதனைத் தொடர்ந்தும் பொதுமக்களிடம் மனுக்களைபெறுவதற்கான ஏற்பாட்டினை செய்தார்கள். இதில் ஏறத்தாழ 68 இலட்சம்மனுக்கள் பெறப்பட்டு, சுமார் 66 இலட்சம் மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளதுமனுக்களை பெற்ற 30 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதேபோல கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை திட்டம். இத்திட்டத்தின் மூலம் இல்லத்தரசிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதில் ஏறத்தாழ 1.16 கோடி பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 1.40 இலட்சம் பெண்களுக்கு கூடுதலாக உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மனுக்களை பரிசீலித்து உதவித்தொகை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மகளிருக்கு பேருந்து கட்டணமில்லா சலுகை வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவியர்களுக்கும் இடை நிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பல்வேறு போட்டித்தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இதுபோன்ற மக்கள் நல திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் அறிவித்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள் என தெரிவித்தார்.

தொடர்ந்து, எலவமலை ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்லம் கட்டுவதற்காக 6 பயனாளிகளுக்கு பணி ஆணையினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அந்தியூர்.ப.செல்வராஜ், மாநிலங்களவை ஈரோடு உறுப்பினர் மேயர் மாநகராட்சி திருமதி.சு.நாகரத்தினம், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் திருமதி.நவமணி கந்தசாமி, ஈரோடு ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் பேரோடுபிரகாஷ், நசியனூர் பேரூராட்சி தலைவர் மோகனப்பிரியா லோகேஸ்வரன் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ஜே.ஜார்ஜ் ஆண்டனி மைக்கேல், முதன்மை கல்வி அலுவலர் சம்பத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) ரமேஷ், ஈரோடு மாநகராட்சி 1ம் மண்டல குழு தலைவர் பி.கே.பழனிசாமி மாநில நிர்வாகிகள் வி.சி சந்திரகுமார் வீரமணி மாவட்ட நிர்வாகிகள் குமார் முருகேஷ் ஆ.செந்தில்குமார் சின்னையன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திண்டல் மணிராசு டி எஸ் குமாரசாமி ஈரோடு ஒன்றிய கழக செயலாளர் தோப்பு சதாசிவம் ஈரோடு மாநகராட்சி மன்ற உறுப்பினர் மங்கையர்க்கரசி பிரகாஷ் சூரம்பட்டி பகுதி செயலாளர்கள் எஸ் குமார வடிவேலு வில்லரசம்பட்டி முருகேசன் இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் தொண்டரணி மாவட்ட அமைப்பாளர் சுள்ளான் ராஜேந்திரன் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள்கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் பரசலூர் அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளியில் அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கு விரிவு படுத்தப்பட்ட முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி ஆகியோர் உள்ளனர்.

## பர்கூரில்

# ரூ.23 லட்சம் மதிப்பிலான பள்ளி உபகரணப் பொருட்கள் வழங்கல்!

பர்கூர், ஜூலை 18–

பர்கூர் சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் அமர்ந்து படிப்பதற்கு மேசை நாற்காலிகள் இல்லாததை அறிந்த பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் 12 அரசு மேல்நிலை பள்ளிகளுக்கு 23 லட்ச ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மேசை, நாற்காலிகளை வழங்க திட்டமிட்டு நிதி ஒதுக்கி தந்தார். இந்த நிதியிலிருந்து மேசை, நாற்காலிகள் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் ஒப்படைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கிருஷ்ணகிரியில் உள்ள தொழிற்பேட்டையில் நடந்த நிகழ்ச்சிகளில் 12 அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் மேசை, நாற்காலிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் அஸ்லாம், ஒன்றிய செயலாளர்கள் சாந்த மூர்த்தி, ராஜேந்திரன், தேங்காய் சுப்ரமணி, அறிஞர், விவசாய அணி அமைப்பாளர் இளையராஜா , மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் லட்சுமி பிரியா , தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் சுரேந்திரன் , எஸ் எஸ் இண்டஸ்ட்ரி சாதிக் பாஷா உள்ளிட்ட நிர்வாகிகள், பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# இ.வி.எம்மை சரிபார்க்கும் நடைமுறைகள் வெளியீடு!

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி, ஜூலை 18-

சமீபத்தில் நடந்து முடிந்த மக்களவை மற்றும் சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள் கடந்த ஜூன் 4ம் தேதி வெளியிடப்பட்டது. இதில், மின்னணு வாக்கு இயந்திரங்களை சோதனையிட 11 வேட்பாளர்கள் தேர்தல் ஆணையத்திடம் மனுதாக்கல் செய்திருந்தனர். இவர்கள் மின்னணு வாக்கு இயந்திரங்களில் முறைகேடு நடந்திருக்கிறதா என்பதை பரிசோதிப்பதற்கான நடைமுறைகளை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. அதன்படி, சம்பந்தப்பட்ட தொகுதியில் பயன்படுத்தப்பட்ட மின்னணு இயந்திரத்தின் நினைவகம் அல்லது மைக்ரோ கன்ட்ரோலர் மற்றும் விவிபாட் இயந்திரத்தில் 5 சதவீதத்தை வேட்பாளர் அல்லது முகவர்களின் முன்னிலையில் இயந்திர தயாரிப்பு நிறுவனத்தின் அலுவலர்கள் மூலம் பரிசோதனை செய்யலாம்.

இதற்கு பல்வேறு விருப்பத் தேர்வுகளை தேர்தல் ஆணையம் வழங்கியிருக்கிறது. குறிப்பாக, சட்டப்பேரவை தொகுதியில் எந்தவொரு குறிப்பிட்ட வாக்குச்சாவடி மையத்தில் பயன்படுத்திய வாக்கு இயந்திரத்தை சோதனையிட மனுதாரர் தேர்வு செய்யலாம். மாதிரி வாக்குப்பதிவு நடத்தியும், மாதிரி விவிபேட் சரிபார்ப்பு நடத்தியும் சோதனை செய்ய முடியும்.

## ஆவடி மாநகராட்சி 21 வது வார்டில் 1 கோடியே 89 லட்ச ரூபாய் மதிப்பீட்டில்

# புதிய அரசு மாதிரி பள்ளிக் கட்டிடம் கட்டுமானப் பணிகள்!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ.அடிக்கல் நாட்டினார்!

திருவள்ளூர், ஜூலை 18-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி வார்டு எண் 21 அண்ணா நகரில் பகுதியில் பள்ளி மாணவ மாணவியர்கள் ஆசிரியர்கள் புதிய பள்ளி கட்டிடம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். இந்நிலையில் கோரிக்கையை ஏற்று 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பயலும் வகையில் ரூபாய் 1 கோடியை 89 லட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளி கட்டிடம் நிதி ஒதுக்கப்பட்டது அதற்கான பணி துவக்க விழா நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்ஏ. அடிக்கல் நாட்டில் பணிகளை துவக்கி வைத்தார் இந்த பள்ளியில் போட்டித் தேர்வுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது இதில் கடந்த ஆண்டு ஜே.இ.இ. தேர்வு எழுதி மூன்று மாணவர்கள் ஐஐடியில் பயில தேர்ச்சி பெற்றுள்ளனர் இந்த பள்ளியில் மாதிரி அரசு பள்ளியில் என உயர்தர கல்வி அளிக்கப்படுகிறது

இதனை தொடர்ந்து

ஆவடி மாநகராட்சி வார்டு எண் 6 கோவில் பதாகை மங்களம் நகர் பகுதியில் மழை நீர் வடிகால் பணிகளையும் திருநின்றவூர் நகராட்சி குட்பட்ட 13.14.15.16.17. ஆகிய வார்டுகளில் மழை நீர் தேங்காமல் செல்ல ஜேசிபி எந்திரம் மூலம் கால்வாய் சீரமைக்கும் பணியை துவக்கி வைத்தார் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார்மண்டல குழு தலைவர் ஜோதி லட்சுமி, பகுதிச் செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், தி.வை.இரவி, ஜி.ஆர்.திருமலை, கவுன்சிலர்கள்வீரபாண்டியன், டாக்டர்ராஜேஷ்குமார், பெ. வினோத், மு.பெ.சசிகுமார், ரவிச்சந்திரன், சிங்காரம், கிருஷ்ண மூர்த்தி, நகர நிர்வாகிகள் தெ.நாகராஜ், அன்பழகன், சி.கமலக்கண் ணன், குணசேகரன், பி.எல்.ஆர்.யோகா, மேகநாதன் மகேஷ்குமார் பிரகாஷ் தங்கராஜ், சரவணன், வெங்கடேஷ், ஜெயக்குமார், ஜீவானந்தம், மகேஷ் மற்றும் பலர் பங்கேற்றனர்.

சீலிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# மணலூர்பேட்டை பேரூர் கழக செயல் வீரர்கள் கூட்டம்!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கள்ளக்குறிச்சி மணலூர் பேட்டை ஜூலை 18-

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம்,ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி, மணலூர்பேட்டை பேரூர் கழக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

பேரூர் கழக அவைத் தலைவர் மாணிக்கம் தலைமை தாங்கினார், பேரூர் கழக செயலாளர் ஜெய்கணேஷ், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் வழக்கறிஞர் பாலாஜி பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர், பேரூராட்சி மன்ற துணை தலைவர் தம்பிதுரை செயல் வீரர்கள் கூட்டத்திற்கு வந்த அனைத்து நிர்வாகிகளையும் வரவேற்றார்.

இந்த செயல்வீரர்கள் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் கலந்து கொண்டு நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல் மற்றும் விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் வெற்றிபெற கடுமையாக உழைத்த கழக நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தும்,மேலும் கழக ஆக்க பணிகள் குறித்தும் பல்வேறு கருத்துகளை கழக நிர்வாகிகளுக்கு எடுத்துரைத்து பேசினார்,இதில் மணலூர்பேட்டை பேரூர் கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட,ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள்,வார்டு கழக செயலாளர்கள், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களால் ஊரகப்பகுதிகளுக்கான மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் கடந்த வாரம் துவங்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் போகலூர் ஊராட்சி ஒன்றியம், முத்துச்செல்லாபுரம் கிராமத்தில் நடைபெற்ற முகாமை பரமக்குடி சட்ட மன்ற உறுப்பினர் முருகேசன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் விஷ்ணு சந்திரன், வட்டாட்சியர் சாந்தி, போகலூர் ஒன்றிய பெருந்தலைவர் சத்யா குணசேகரன், துணைத் தலைவர் வழக்கறிஞர் பூமிநாதன், ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் குணசேகரன், ஊராட்சி மன்ற தலைவர் கார்த்திக் பாண்டியன் உட்பட கட்சி நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.